செய்திவெளியீடு எண்.15/2017 நாள் 08.03.2017

# சென்னை போரூர் ஏரி நீரை குடிநீருக்காக பயன்படுத்த சென்னைக் குடிநீர் வாரியம் நடவடிக்கை

---

சென்னை மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு சென்னைக் குடிநீர் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது.

தற்போது கோடையின் குடிநீர் தேவையை சமாளிக்க சென்னை போரூர் ஏரியிலுள்ள நீரை சென்னை மக்களின் குடிநீர் விநியோகத்திற்காகப் பயன்படுத்த சென்னைக் குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்காக போரூர் ஏரி நீரை சுத்திகரிப்பு செய்வதற்காக ஏரியின் அருகிலேயே தற்காலிக சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் அதற்கான சோதனை ஓட்டத்தினை நடத்துவதற்கும் தேவையான பணிகளை விரைந்து மேற்கொள்வதற்கு சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தி இருந்தார்கள்.

பொறியியல் இயக்குநர் திரு. கே. லஷ்மணன் அவர்கள் தலைமையிலான பொறியளர்கள் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். போரூர் ஏரியில் நடைபெற்று வரும் இப்பணிகளை மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் இன்று நேரடியாகச் சென்று ஆய்வு செய்தார்கள்.

போரூர் ஏரியில் சுத்திகரிக்கப்படும் நீரின் தரம் குறித்து ஆய்வு செய்வதற்காக அதன் மாதிரிகள் சென்னை கிண்டியிலுள்ள " கிங் நிலையத்திற்கு " அனுப்பி வைக்கப்பட்டு சோதனை செய்யப்படும்.

நீரின் தரம் குடிநீருக்கு உகந்ததாக இருந்தால் அதனை சென்னை மக்களின் குடிநீருக்காக பயன்படுத்தக் கூடிய வகையில் ஏற்கனவே ஏரியை ஒட்டி அமைந்துள்ள வீராணம் பிரதான குழாயுடன் இணைக்கப்பட்டு சென்னை மக்களின் பயன்பாட்டிற்கு விநியோகிக்கப்படும்.

இதன் மூலம் தினசரி 4 மில்லியன் லிட்டர் குடிநீரை தொடர்ந்து 3 மாதங்களுக்கு ஏரியிலிருந்து எடுத்து விநியோகிக்க முடியும்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்





